## சமூகம் நினைத்துக் கொண்டிருப்பதைவிட

# மதிப்புமிக்கவர் கலைஞர்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



மாண்புமிகு
முதலமைச்சரைச் சந்தித்தேன்

வெளிநாட்டுப் பயணத்துக்கு
வாழ்த்தும்
கலைஞர் படைப்புகளின்
நாட்டுடைமைக்கு
நன்றியும் தெரிவித்தேன்

கலைஞர் நூற்றாண்டு
நினைவு நாணயத்தை
எனக்கவர் பரிசளித்தார்;
மகிழ்ந்து போனேன்

வீட்டுக்கு வந்ததும்
கலைஞர்
எனக்களித்த பேனாவுக்குப்
பக்கத்தில் வைத்துப்
பத்திரப் படுத்தினேன்

கலைஞருக்கும்
இந்த நாணயத்துக்கும்
ஓர் ஒற்றுமை உண்டு

35 கிராம் எடைகொண்ட
இந்த நாணயம்
50 விழுக்காடு வெள்ளி
40 விழுக்காடு பித்தளை
5 விழுக்காடு நிக்கல்
5 விழுக்காடு துத்தநாகம்
கொண்டது

இதன் இந்திய மதிப்பான
100 ரூபாயைவிட



இதன் தயாரிப்புச் செலவு
கூடுதல் மதிப்புடையது

அப்படித்தான்...

இந்தச் சமூகம்
நினைத்துக்கொண்டிருப்பதைவிடக்
கலைஞரும் மதிப்பு மிக்கவர்

கவிப்பேரரசு
**வைரமுத்து**



## விண்ணப்பித்த தகுதியுள்ள அனைவருக்கும் மின்னணு அட்டைகள்!

# புதிய குடும்ப அட்டைகள் விரைந்து வழங்கப்படுகின்றன!

### உணவு - உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

சென்னை, ஆக. 25 -

புதிய குடும்ப அட்டைகள் விரைந்து வழங்கப்பட்டு வருகின்றன என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு, முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பொறுப்பேற்ற பின்பு இதுவரை 15,94,321 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் த்தொகைத் திட்டத்திற்கான பயனாளிகள் குடும்ப அட்டையை அடிப்படையாகக் கொண்டு கணக்கெடுக்கப்பட்டதால், குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மாறுபடாமல் பராமரிக்கப்பட்டதையொட்டி 06.07.2023 முதல் புதிய குடும்ப அட்டைகள் விண்ணப்பத்திற்கு ஒப்புதல் அளிக்கும் பணியும் ஏற்கனவே அச்சடிக்கும் நிலையிலிருந்த குடும்ப அட்டைகள் அச்சடிக்கும் பணியும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன.

ஆனாலும் மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் 17,197 குடும்ப அட்டைகள் டிசம்பர் 2023 மாதத்தில் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டன. அதேபோன்று வெள்ளம் பாதிக்கப்பட்ட



திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 10,380 குடும்ப அட்டைகள் டிசம்பர் 2023 மாதத்தில் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

மார்ச் 2024 மாதத்தில் 45,509 குடும்ப அட்டைகள் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டன. இடையில் நாடாளுமன்றத் தேர்தல் நடைமுறைகளின் காரணமாக விண்ணப்பங்களைச் சரிபார்த்தல் மற்றும் ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை நிலவியதால் தேர்தல் முடிந்தபின் கள விசாரணை மற்றும் விண்ணப்ப விவரங்கள் சரிபார்க்கும் பணி முடுக்கி விடப்பட்டன. நாளது தேதி வரை பெறப்பட்ட 2,89,591 விண்ணப்பங்களில் 1,63,458 புதிய குடும்ப அட்டை விண்ணப்பங்கள்

கள விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, 92,650 விண்ணப்பங்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்ட 24,657 விண்ணப்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்ட இதர விண்ணப்பங்களுக்கும் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வருகின்றன. மீதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கும் தொடர்ந்து கள விசாரணையும் விண்ணப்பங்கள் சரிபார்க்கும் பணியும் விரைந்து நடந்து வருகின்றன.

ஆதலால், சிலர் கூறுவது போல் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குவதில் எவ்விதத் தாமதமும் இல்லை என்பதையும் விண்ணப்பித்த தகுதியுள்ள அனைவருக்கும் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் விரைந்து வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம், பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் அமைச்சர் பெருமக்கள் இ. பெரியசாமி, அர.சக்கரபாணி, பி.கே. சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில் நேற்று (24.08.2024) மாநாட்டு வளாகத்தில் தவத்திரு இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள் மாநாட்டு கொடியினை ஏற்றி வைத்தார். உடன் ஆதீன பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய

# சட்டமன்றப் பேரவைச் செயலக அலுவலகத்திற்கு சுழற்கோப்பை!

### அமைச்சர் மு.பெ. சாமிநாதன் - பேரவைச் செயலாளரிடம் வழங்கினார்!

*சென்னை, ஆக.25-*

*தமிழ்நாடு அரசின் ஆட்சிமொழிச் சட்டத்திற்கிணங்க அரசின் நிருவாக மொழியாகத் தமிழ் மொழி இருந்து வருகிறது. ஆட்சி மொழிச் சட்டத்தின் அடிப்படையில் பிறப்பிக்கப் பெற்றுள்ள அரசாணைகளின்படி, அரசின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறு வனங்கள் ஆகியவற்றின் நிருவாக அலுவல்களில் முழுமையாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்திடும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழி காட்டுதலின்படி, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனும் இலட்சிய இலக்கை அடைய தமிழ் வளர்ச்சித் துறையால் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.*

*தமிழ் வளர்ச்சித் துறையின் தலையாயப் பணியான ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கப் பணியினை மேன்மையுறச் செய்திட, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் அவர்களால் தலைமைச் செயலகத் துறைகளி லும், தமிழ் வளர்ச்சி இயக்குநரால் துறைத் தலைமை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், அரசு நிறுவனங்கள், மாவட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றிலும் இத்திட்டம் தொடர்பான ஆய்வுப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.*

*மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் / மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் / மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் ஆகியோர் மாவட்ட நிலை மற்றும் சார்நிலை அலுவலகங்களில் இவ்வாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*அவ்வகையில் 2022-ஆம் ஆண்டிற்கான ஆட்சி மொழித் திட்டச் செயலாக்க ஆய்வு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலக அலுவலகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவற்றுள், தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய அலுவலகமாக தலைமைச் செயலகச் சட்டமன்றப் பேரவைச் செயலகம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான சுழற்கோப்பையை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (23.08.2024 வெள்ளிக்கிழமை) சென்னை, தலைமைச் செயலகத்தில் சட்டமன்றப் பேரவைச் செயலக அரசு முதன்மைச் செயலாளர் கி. சீனிவாசனிடம் வழங்கினார்.*

*இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே. இராஜாராமன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள் ஆகியோர் உடனிருந்தனர்.*


### தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சிவகாசி மாநகரம்**

**தலைவர் :** மங்களம், வெல்லஞ்சாமியார் தெரு, சிவகாசி.

**துணைத் தலைவர் :** சூரத் பானு, சீதக்காதி தெரு, சிவகாசி.

**அமைப்பாளர் :** தமிழரசி, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல்.

**துணை அமைப்பாளர்கள்** : 1.வசந்தி, பிள்ளையார் கோவில் தெரு, திருத்தங்கல். 2.கலைச்செல்வி, திருப்பதி நகர், திருத்தங்கல். 3.சாந்தி, நா.பா.வீதி, திருத்தங்கல். 4.அமுதா, ஜவஹர்லால் தெரு, சிவகாசி. 5.குருலெட்சுமி, பராசக்தி காலனி, சிவகாசி.

**வலைதள பொறுப்பாளர்கள்** 1.ஜெயஸ்ரீ, செங்கமல நாச்சியார்புரம் ரோடு, திருத்தங்கல். 2.ராமுபிரியா, பாண்டியன் நகர் 6வது தெரு, திருத்தங்கல்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.08.2024

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்,
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

### தி.மு.க. மகளிர் அணி

# விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகர தி.மு.க. மகளிர் அணியின் அமைப்பாளர் - துணை - அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சிவகாசி மாநகரம்**

**தலைவர் :** பிச்சைமணி, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல், சிவகாசி.

**துணைத்தலைவர் :** பூமணி, முத்துமாரியம்மன் காலனி, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல், சிவகாசி.

**அமைப்பாளர் :** சித்ரா, வெல்லஞ்சாமியார் தெரு, சிவகாசி.

**துணை அமைப்பாளர்கள்** : 1. பொன்செல்வி, தெய்வானை நகர், விஸ்வநத்தம் ரோடு, சிவகாசி. 2. முத்துலட்சுமி, வள்ளலார் தெரு, சிவகாசி. 3. காமிலா குரைசியா, சீதகாதி முஸ்லீம் தெரு, சிவகாசி. 4. தஸ்லீமா பானு, திருத்தங்கல். 5. ரெங்கலட்சுமி, வடக்கு ரத வீதி, திருத்தங்கல்.

**வலைதள பொறுப்பாளர்** : 1. வனிதா, வள்ளலார் தெரு, சிவகாசி. 2. திவ்யகுமாரி, கல்லறை தெரு, பி.கே.எஸ்.எ ஆறுமுகம் ரோடு, சிவகாசி.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.08.2024

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி




தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி கோவிலில் நேற்று முன்தினம் 23 ந்தேதி நடைபெற்ற திருக்குட முழுக்கு விழாவில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்றார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜா, சதன் திருமலை குமார், ராணி ஸ்ரீகுமார் எம்.பி. மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், அறங்காவலர் குழு தலைவர் சண்முகையா உள்பட பலர் உள்ளனர். நிகழ்வில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.